**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 150** **நாள்: 26.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்த ஒப்பந்ததார்களுக்கான ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை மாநகரின் வெள்ளத்தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 14.09.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசால் 2017ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பருவமழை கண்காணிப்பு உயர் அலுவலர்கள் அளித்த பரிந்துரைகளின்படி, சென்னை மாநகர் முழுவதும் வெள்ள மற்றும் மழைநீர் தடுப்பு வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைந்து முடித்திட அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில், தமிழக அரசால் சென்னை மாநகருக்கு சென்னை பெருநகர மேம்பாட்டு திட்ட நிதி 2018ன் கீழ் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக ரூ.290 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், சென்னை மாநகர் முழுவதும் சுமார் 117 கி.மீ. நீளத்திற்கு விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்வதற்காக 71 சிப்பங்களுக்கு பணி ஆணைகள் 24.09.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இன்று முதல் (26.09.2018) துவங்கப்பட உள்ளது.

இப்பணிகள் அனைத்தும் துவங்கும் முன் அந்தந்த பகுதி உதவி செயற்பொறியாளர்கள் எங்கெங்கு பணி நடக்கிறதோ, அந்தப் பகுதியின் சேவைத்துறையின் உதவி செயற்பொறியாளருக்கு மற்றும் மாநகராட்சி கோட்டப் பொறியாளருக்கும் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும் எனவும்,

மழைநீர் வடிகால் பணிகளுக்காக தோண்டும்போது குடியிருப்பு பகுதி அல்லது வணிக வளாகப் பகுதிக்கு செல்வதற்கு ஏதுவாக கைப்பிடியுடன் கூடிய தற்காலிக நடைபாதை

அமைக்கப்பட வேண்டும் எனவும், பழைய மழைநீர் வடிகாலை உடைத்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளும்போது பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசம், உபகரணங்கள் கொண்டு தான் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மழைநீர் வடிகால் பணிகளின் போது, தோண்டி எடுக்கப்படும் தூர் மற்றும் மண்ணை ஒப்பந்தப்பணி நிறுவனம் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். கழிவுநீர் இணைப்பு மழைநீர் வடிகாலில் கொடுத்திருந்தால், அதை துண்டித்து குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய கழிவுநீர் குழாயுடன் இணைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிகள் நடைபெறும் இடங்களில் கேட்ஸ் ஐ 3எம் (3எம் ஸ்டிக்கர்) என்ற ஒளிரும் ஸ்டிக்கர் பார்வையில் தெரியும்படி ஒட்டப்பட வேண்டும். பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் பொதுமக்கள் நுழையாதவாறு தகுந்த இரும்பு தடுப்புகள் அமைத்து மேற்கொள்வதோடு, ஒப்பந்த நடைமுறைகளை கண்டிப்பாக ஒப்பந்தாரர்கள் பின்பற்ற வேண்டும் எனவும், நடைமுறைகளை பின்பற்றாத ஒப்பந்ததாரர்களுக்கு தாக்கீது வழங்கி பணிகள் நிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெறுவதை 15 மண்டலங்களிலும் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கண்காணிப்பு உயர் அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்வார்கள். இப்பணிகள் முழுவதும் வடகிழக்கு பருவமழைக்கு முன்பாகவே போர்க்கால அடிப்படையில் முடித்திட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் பணிகள் நடைபெறும் இடங்களில் பொதுமக்கள் தங்களது உடைமைகள், வாகனங்கள் மற்றும் குடிநீர் தொட்டிகள் என ஏதேனும் வைத்திருப்பின் உடனடியாக அப்புறப்படுத்தி விரைந்து பணி நடைபெற முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, மேற்பார்வை பொறியாளர் திரு.எல்.நந்தகுமார், ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**